Spl.SC.No.12/2020 Dated:. 03.10.2023

A1 to A8 present.

அ.சா. 2 ஆதிமூலம்

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

நான் அ.சா.1 க்கு செல் போன் மூலம் எந்த தகவலும் சொல்லவில்லை என்றும் அரசு வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சான்று பொருட்களாக குறியிடப்பட்ட கார் மற்றும் பைக்கை போலிசார் காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் காண்பித்ததின் அடிப்படையில் நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தேன் என்றால் சரியல்ல. நான் அடையாளம் காட்டிய சான்றுபொருட்களை நான் ஒரு பொழுதும் பார்த்ததில்லை என்று சொன்னால் சரியல்ல.

**A3 தரப்பு குறுக்கு விசாரணை :-**

இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள். தேதி ஞாபகம் இல்லாத ஒருநாள் மாலை 5 மணிக்கு சக்கரவாளநல்லூரில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலிசார் யார் என்று எனக்கு தெரியாது. ஊரில் இராமன் என்ற பெயர் பல நபர்களுக்கு இருக்கும் என்றால் சரிதான். 9/152-3 நான் தற்பொழுது குடியிருக்கும் வீட்டின் கதவு எண் என்றால் சரிதான். மின் இணைப்பு என்னுடைய பெயரில்தான் உள்ளது. என் வீடு தேவிப்பட்டிணத்தில் அரசு மருத்துவமனைக்கு அருகில் உள்ள காந்திநகரில் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 வைரவகேசுவை நான் அண்ணன் என்று அழைப்பேன். அவரும் நானும் கட்டிட கான்ட்ராக்ட் வேலைதான் செய்து வருகிறோம்.

நான் அ.சா.1 ரிடம் வேலை செய்கிறேன் என்றும் அவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரியல்ல. அ.சா.1 வைரவகேசு தேவிப்பட்டிணத்தில் உள்ள கிழக்கு நாடார் தெருவில்தான் குடியிருக்கிறார். அதனால் எனக்கு 3 வது எதிரி சேதுபதியை ஏற்கனவே எனக்கு நன்கு தெரியும் என்றால் அதற்கு முன்பும் சிறுவயதில் இருந்து அவரை எனக்கு தெரியும். 3 வது எதிரி சேதுபதியும் கட்டிட கான்ட்ராக்ட் வேலை செய்கிறார் என்றால் மணல் வியாபாரம் செய்து வருகிறார். அ.சா.1 ம் இறந்து போன அவர் மகனும் மண் வியாபாரம் செய்தார்கள் என்றால் சரிதான். அ.சா.1 வைரவகேசு, அவர் மகன் அரவிந்தன் மற்றும் 3 வது எதிரி சேதுபதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல்நிலையம் சென்றிருக்கிறார்கள் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சாட்சியளித்தவாறுதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். போலிஸ் விசாரணையில் " Hyundai –Creta கார் " என்று சொல்லியுள்ளேன். இரவு 10.30 மணி என்பது இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு பெயர் கிழக்கு கடற்கரை சாலை என்றால் சரிதான். திருச்சி, சென்னை, வேளாங்கன்னி மற்றும் பிற ஊர்களுக்கு செல்லும் வாகனங்கள் அந்த வழியாகத்தான் செல்லும். அப்போது சாலை விரிவுபடுத்தும் பணிகள் நடந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். என்னை போலிஸ் விசாரித்தபோது அந்த காரில் 4,5 நபர்கள் இருந்தார்கள் அதில் தேவிப்பட்டிணம் வடக்கு தெருவைச் சேர்ந்த இராமன் மகன் சேதுபதி மட்டும் என்னால் அடையாளம் பார்க்க முடிந்தது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நாங்கள் ரோட்டின் கிழக்கு பக்கம் நின்று கொண்டிருந்தோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோட்டின் மேற்கு பக்கம் என்றால் சரிதான். அந்த ரோடு 36 அடி

அகலமாக ரோடு என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு சரியாக தெரியாது. நான் நின்ற இடத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையே சுமார் 1 பர்லாங் இருக்குமா என்று கேட்டால் 20 அடி இருக்கும். ரோட்டின் இருபக்கமும் பள்ளிகள், பெட்ரோல் பல்க், கல்லூரிகள் உள்ளன என்றால் சரிதான். அந்த பள்ளிக்கூடத்திலும், பெட்ரோல் பல்க், கல்லூரிகளில் மக்கள் எப்போதும் இருப்பார்கள் என்று கேட்டால் எப்போதும் இருக்க மாட்டார்கள், சில சமயங்களில் இருப்பார்கள். அந்த பள்ளியில் எப்போதும் வாட்ச்மேன் இருப்பார்கள் என்றால் சரிதான். நான் நின்ற இடத்திலிருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு செல்ல சுமார் 2 நிமிடம் ஆனது. நான் அந்த இடத்திற்கு சென்றபோது பைக் சாய்ந்த நிலையில் இருந்தது. நான் அரவிந்தனை தூக்கி பார்த்தபோது என் உடையில் இரத்தக்கரைபட்டது. அந்த இரத்தம் பட்ட உடையை நான் போலிசாரிடம் கொடுக்கவில்லை. நான் பார்க்கும்போது அரவிந்தனுக்கு தலையில் அடிபட்டு இரத்தம் ஓடிக்கொண்டு இருந்தது. அவருக்கு தலையின் பின்புறம் எந்த இரத்தக்காயமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பார்த்தபோது கல்யாணக்குமார் பதட்டமான நிலையில் இருந்தார் என்பதை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை. நான் போலிஸ் விசாரிக்கும்போது கல்யாணக்குமாரை தூக்கி "மெதுவாக வரக்கூடாதா என்று கேட்டேன் என்றும், அதற்கு கல்யாணக்குமார் நாங்கள் மெதுவாகத்தான் வந்தோம், ஆனால் அரவிந்தனுக்கு வேண்டாதவர்கள் பின்னாடி வந்து மோதிவிட்டார்கள்" என்று அவர் சொன்னதாக சொல்லவில்லை. நான் இந்த சம்பவத்தை தேவிப்பட்டிணம் போலிசாரிடம் சொல்லவில்லை. சம்பவ இடத்திற்கு சார்பு ஆய்வாளர் வந்தது 10.45 மணி இருக்கும் என்றால் சரிதான். அந்த சார்பு ஆய்வாளர் பெயர் தங்கராஜ்.

அவர் சம்பவ இடத்திற்கு சம்பவத்தைப் பற்றி தெரிந்துகொண்டு வந்தாரா என்று எனக்கு தெரியாது. மேற்படி சார்பு ஆய்வாளர் என்னிடம் சம்பவத்தைப் பற்றி கேட்டாரா என்றால் கேட்கவில்லை. அங்கு கூடியிருந்த மற்றவர்களிடம் கேட்டார். அவர்கள் சொன்னதை அவர் எழுதிக்கொண்டாரா என்றால் நான் அதை கவனிக்கவில்லை. அங்கு நின்றவர்களிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டார்களா என்பதையும் நான் கவனிக்கவில்லை. நான் இருந்தபோது பைக்கை எடுத்துக்கொண்டு போனாரா என்று கேட்டால் நான் மருத்துவமனைக்கு காயம்பட்டவர்களை அழைத்து சென்ற பின்பு எடுத்திருக்கலாம், நான் அங்கு இருக்கும்வரை எடுக்கவில்லை. அ.சா.1 வைரவகேசு மற்றும் பூமிராஜன் ஆகியோர் அந்த இடத்திற்கு வரும்போது இரவு சுமார் 10.40 மணி இருக்கும். அவர்களுடன் கல்யாணக்குமாரின் உறவினர்களும் வந்தார்கள். அ.சா.1 வைரவகேசுவும், பூமிராஜனும் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பே நாங்கள் காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்ப வண்டியில் ஏற்றி விட்டோமா என்றால் காயம்பட்டவர்களை ஏற்றிக்கொண்டிருக்கும்போது அவர்கள் வந்துவிட்டார்கள். வைரவகேசுவும், பூமிராஜனும் ஒரே இருசக்கர வாகனத்தில் தான் சென்றார்களா என்று நான் கவனிக்கவில்லை. கல்யாணக்குமாரின் உறவினர்கள் சுமார் 2,3 நபர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் அவர் அப்பாவை மட்டும் எனக்கு தெரியும். அதன்பிறகு அவர்கள் மருத்துவமனை சென்றுவிட்டார்கள். நான் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன். தேவிப்பட்டிணத்தில் காந்திநகரில் 5 வருடங்களாக நான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் இருசக்கர வாகனம் வைத்திருக்கிறேன். நான் இராமநாதபுரம் , திருப்பாலைக்குடி, ஆர்.எஸ் மங்களம் ஆகிய ஊர்களுக்கு என்னுடைய இருசக்கர

வாகனத்தில்தான் செல்வேன் என்றால் சரிதான். நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், வழக்கில் சாட்சி வேண்டும் என்பதற்காகவும் வைரவகேசு எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் நான் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அரவிந்தன் இறந்தபிறகு உடலை பெற்றுக்கொள்ளாமல் மறியல் செய்தோம் என்றால் சரிதான். அதில் சாதி தலைவர்கள் கலந்து கொண்டார்களா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. ஆனால் ஆட்கள் நிறைய இருந்தார்கள். வழக்கு தாக்கல் செய்தால்தான் அரவிந்தனின் உடலை வாங்குவோம் என்று நாங்கள் மறியல் செய்ததால் வேறு வழியில்லாமல் இந்த எதிரிகளுக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கருப்பர் கோவில் ஒன்றும், முனியய்யா கோவில் ஒன்று இருக்கிறது என்றால் சரிதான். இரண்டு கோவில்களிலும் பூசாரி இருக்கிறார். சம்பவ இடத்திற்கு மிக அருகில் விஜயகுமார் என்பவர் வீடு இருக்கிறது. இந்த எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், நான் அ.சா.1 க்கு நெருங்கிய உறவினர் என்பதால் இது பொய் வழக்கு என்றால் சரியல்ல. காளிதாஸ், முனியாண்டி சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**A8 தரப்பு குறுக்கு விசாரணை :–**

சம்பவத்திற்கு சுமார் 2 நாட்களுக்கு பின் என்னை போலிசார் விசாரித்தார்கள். அவர்கள் விசாரிக்கும்போது என்னுடன் வைரவகேசு இல்லை. போலிசார் என்னை விசாரிக்கும்போது என்னுடைய போனை வாங்கி நான் வைரவகேசுக்கு போன் செய்தேனா இல்லையா என்பதை பார்க்கவில்லை. போலிசார் என் போன் நம்பரை வாங்கி கொண்டார்கள்.

நான் சம்பவத்தன்று சம்பவ இடத்தில் இருந்து வைரவகேசு சென்ற வாகனத்திலோ, அரவிந்தன் சென்ற வாகனத்திலோ அல்லது எந்த வாகனத்திலோ நான் என் தாயாரை பார்ப்பதற்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் நான் எந்த தகவலும் அ.சா.1 க்கு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் Hyundai Creta என்ற காரை சம்பவத்திற்கு முன் பார்த்துள்ளேன். சம்பவத்திற்கு பின் நீதிமன்றத்தில்தான் பார்த்தேன். இடைப்பட்ட காலத்தில் நான் பார்க்கவில்லை.

மேற்படி குறுக்கு விசாரணை A4 தரப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- B.C.Gopinath

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)